[25th March 1959

Murder case

*907-L *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா, திருப்பத்தூர் தாலூகா, அம்பலூர் கிராமத்தில் 2-10-58-ம் தேதி இரண்டு பேர்கள் கொலை செய்யப்பட்டார்களா ?

(ஆ) கொலை செய்தவர்களைக் கண்டு பிடிக்க போலீஸ் நாய்கள் அனுட்பப்பட்டனவா ?

(இ) எத்தனை முறை அனுப்பப்பட்டன ?

(ஈ) துப்புக் கண்டு பிடிக்கப்பட்டதா ?

(உ) இல்லை என்றால் போலீசார் இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) One of the police dogs was sent.

(*c*) Only once.

(*d*) No. Sir.

(*e*) All efforts to trace the culprits proved futile. As there was no clue to work upon, the case was treated as undetected on 31st January 1959.

SRI V. K. KOTHANDARAMAN : அனுப்பப்பட்ட போலீஸ் நாய்கள் கண்டுபிடித்த பிறகும் அவர் பேரில் ஏன் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. சர்க்கார் இதில் தலையிட்டதின் காரணமாகத்தான் அவர் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : "சொல்லப்படுவது" என்று சொல்லி எதை வேண்டுமானாலும் சர்க்கார் மீது சொல்வது பொறுப்புள்ள நடவடிக்கை அல்ல என்று கனம் அங்கத்தினருக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முன்பே விளக்கியிருக்கிறேன். நாய் கண்டு பிடித்தால் அதுவே போதுமான சாட்சியம் அல்ல ஒருவரை கோர்ட்டில் தண்டிப்பதற்கு. நாய் கண்டு பிடிப்பது என்றால், அது புலன் சொல்கிறது. அதற்கு மேல் விசாரணை செய்து அதற்கு வேண்டிய சாட்சியங்களை கண்டு பிடிக்கவேண்டும். அதற்கு போலீஸார் முயன்றதில் சாட்சியங்கள் ஏற்படவில்லை. ஆகவே அதற்கு மேல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I make a submission, Sir? அங்கத்தினர்கள் இது மாதிரி, அதிலும் கேஸ்களில் சர்க்கார் தலையிட்டதாக குறிப்பிட்டுச் சொல்லும்போது, தக்க ஆதாரங்கள் இல்லாது இங்கு சொல்லக் கூடாதென்று சர்க்காருக்கும் கொஞ்சம் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று உங்களை கேட்டுக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் தக்க ஆதாரம் இல்லாமல் எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்றில்லாது சர்க்காருக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I am glad the Hon. the Leader of the House has raised this question. If it is a primary question, I find out if there is any basis for that question and then only I allow it. But, when hon. Members raise supplementary questions on the floor of the House, I have no time to discuss . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, in such cases. I would suggest that it may be ruled out of order. If, however, the Member concerned is prepared to substantiate the allegations that he makes,

25th March 1959]

then the Chair may permit him to put the question subject to the condition that he will substantiate the allegations and submit details of the same to the Speaker later on.

Mr. SPEAKER : I have always maintained that. When hon. Members make statements and allegations and refer to documents. I tell then that they should not make such statement unless the Chair also had copies of the same. In fact, even this morning, I objected to the Members' making some allegations about the action of the Central Government about which the Chair was not aware. That is why, I am making an appeal to the hon. Members that in the interests of harmony, they should make only such statements of which they are sure and which they can prove. Even to-day, an hon. Member was saying "இந்த மாதிரி புகார் இருப்பது இராசாங்கத்திற்குத் தெரியுமா?" That is a statement which I normally should not allow. Of course the hon. Ministers can say that it was a wrong statement. I would once again appeal to the hon. Members not to say such things.

Sri S. M. ANNAMALAI : நாங்கள் கேட்ட கேள்விகள் அனைத்தும் போலீசாரைப்பற்றி கேட்டோமே தவிர நீதிமன்றத்தைப்பற்றி கேட்கவில்லை. அப்படியிருக்கும்போது ஒரு சட்ட மன்ற உறுப்பினருக்கு இதைக் கூட கேட்க உரிமையில்லையா ?

Mr. SPEAKER : கேட்கலாம். ஆனால் அதை ருசு செய்யவேண்டிவரும்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கேட்ட கேள்வி போலீஸாரைப்பற்றியல்ல. அரசாங்கம் இதில் தலையிட்டது என்று அபாண்டமான குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. ஆகவேதான் சொன்னேன், அங்கத்தினர்கள் அப்படிச் சொல்வது பொறுப்புள்ள தன்மையல்ல, என்று.

Mr. SPEAKER : I agree with the Hon. Minister.

Sri V. K. KOTHANDARAMAN : இங்கு கேட்கப்படக்கூடிய கேள்விகள் பேரில் நடவடிக்கைகள் எடுத்து, நிரூபிக்கப்படவில்லை என்றால் அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள உரிமையிருக்கிறது. ஆக, நிதியமைச்சர் அவர்கள் மறைமுகமாக என்ன சொல்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன் என்று சொன்னால், அவர்..................

Mr. SPEAKER : It is not so. இந்த சபையில் என்ன சொன்னாலும் யாதொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆகவேதான் இந்த சபையில் அந்த மாதிரி வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாதென்று அரசாங்கமும், நானும் சொல்கிறேன். இந்த சபையில் என்ன சொன்னாலும், அரசாங்கமோ அல்லது யாருமே நடவடிக்கைகள் எடுக்க முடியாததால் தப்பித்துக் கொண்டு போகலாம். அதற்கு, இங்கிலீஷில் "பிரிவிலேஜ்" என்று சொல்வார்கள்.

Sri T. KARIA GOUNDER : இந்தக் கொலை வழக்கைப்பற்றி இந்த சபைக்குள்ளேயும் வெளியேயும் உண்மைக்கு மாறாக புகார் செய்யப் பட்டது. முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டதென்பது கனம் போலீஸ் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எதை எதையோ, யார் யாரோ வெளியில் பேசுவதை நான் நோட்டீஸில் எடுத்துக்கொள்ள முடியாது. இதற்கு நடவடிக்கைகள் ஒன்றுமில்லை.